செ.வெ.எண்: 78 நாள்: 03.02.2009

அரசு செய்தி வெளியீடு – 3.2.2009

இலங்கை ராணுவத்தைச் சேர்ந்த வான் படை வீரர்கள் சிலர் தாம்பரத்திலுள்ள வான்படை பயிற்சிக் கூடத்திற்கு வந்திருப் பதாகவும், அவர்களுக்கு பதிவு வழங்குமாறும் தாம்பரம் வான்படையினர் சேலையூர் காவல் நிலையத்தில் கேட்டுக் கொண்ட செய்தி அறிந்து, முதல் அமைச்சர் அவர்களின் அறிவுரைப்படி தலைமைச் செயலாளர் மத்திய அரசின் பாதுகாப்புத் துறையிடம் தொடர்பு கொண்டு, அவர்களை உடனடியாக திருப்பி அனுப்ப வேண்டுமென்று கேட்டுக் கொண்டார்கள்.

முதலமைச்சர் அவர்களின் கோரிக்கையினை ஏற்று, மத்திய அரசு அந்த இலங்கை ராணுவத்தைச் சேர்ந்த வீரர்களை தமிழகத்திலிருந்து திரும்ப அனுப்ப உத்தரவிட்டதோடு, அந்தச் செய்தியினையும் முதலமைச்சர் கலைஞர் அவர்களுக்கு தெரிவிக்குமாறு கூறியுள்ளது.

வெளியீடு, இயக்குநர்,
செய்தி-மக்கள் தொடர்புத் துறை,
தலைமைச் செயலகம், சென்னை-9